பெரிய பகுதியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் இயங்காத காரணத்தால் மாவட்டத்தில் இருக்கிற 5 நகராட்சிகளில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயங்குவதைப்போல அருப்புக்கோட்டையையும் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் நிர்வாகத்தைக் கொண்டு வந்தால் இந்தச் சிரமங்கள் போக்கப்படும். அரசு அதுப்பற்றி பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நிர்வாக வசதிக்கேற்றப்படி பிரித்து இருப்பதினுடைய அடிப்படையில் எந்த அளவிற்கு போக்குவரத்து வசதிகளை மேலும் விரிவாக்கலாம் என்று கருத்து அறிவதற்காகத்தான் சென்ற மாதம் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டம் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே நடத்தப்பட்டு உறுப்பினர்களுடைய கருத்துக்கள் எல்லாம் கேட்கப்பட்டு, அதனுடைய அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய தலைமையகங்கள் மாற்றப்பட வேண்டும் அல்லது பிரிக்கப்படவேண்டும் என்பதான போன்ற கருத்துக்கள், நிபுணர் குழு அறிக்கை வந்ததற்குப் பின்னர்தான் அரசு இறுதியான முடிவிற்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய இறுதியான முடிவு வரும்வரைக்கு மாவது இடைக்காலத்திலே அந்தப் பகுதியினுடைய மக்களுடைய தேவைகளை அறிந்து புதிய வழித்தடங்களையும் அல்லது வேண்டிய இடங்களுக்கு வழித்தடங்களை நீட்டுகிற வேண்டுகோள்களையும் அரசு பரிசீலித்து உடனடியாக நிறைவேற்றுமா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு பரிசீலித்து நிறைவேற்றும்.

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அரசினர் தனித் தீர்மானம்.

மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப் படுத்த ஆணை பிறப்பித்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும் பிரதமர் வி.பி. சிங். அவர்களுக்கும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க, கீழ்க்கண்ட பாராட்டு, நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை மொழிவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

''நீண்ட நெடுங்காலமாகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிறைவேறாத கோரிக்கையாக இருந்த மத்திய அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளிலும் இட ஒதுக்கீடு என்பதை அரசியல்